**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 368/2018**

2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 28.01.2026 | | |
| பெயர்: | பழனிவேல் (DW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | சிவானந்தம் |
| கிராமம்: | சந்தப்படுகை | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | ரயில்வே பணி | வயது : | 48/2026 |

**முதல் விசாரணை : 28.01.2026**

நான் இவ்வழக்கின் 2ம் பிரதிவாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. கடந்த 29.07.2016 தேதியிட்ட தாவா சொத்திற்கான கூட்டுப்பட்டா **பி.வா.சா.ஆ.**1 ஆகவும்

2. 30.05.2018 தேதியிட்ட தாவா சொத்திற்கான பட்டா மாறுதல் உத்தரவு கணிணி பதிவிறக்க நகல் **பி.வா.சா.ஆ.2** ஆகவும்

3. தாவா சொத்திற்கான 23.10.2009, 13.09.2017, 24.01.2018 தேதிகளிட்ட மற்றும் தேதியிடப்படாத கிஸ்தி ரசீதுகள் (எண்ணிக்கை 4) **பி.வா.சா.ஆ.3** ஆகவும்

4. அனுமந்தபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் எனது தாயார் செல்வநாயகி பெயரில் பணம் செலுத்திய counter foil எண்ணிக்கை 4 **பி.வா.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.